
# கட்டிளமைப்பருவக் கர்ப்பங்களையும் பாதுகாப்பற்ற கருச்சிதைவுகளையும் தவிர்ப்போம்!!!



வெளியீடு


சுகாதார கல்விசார் பொருட்கள் தயாரிப்பு அலகு,

சமுதாயமருத்துவத்துறை,

மருத்துவபீடம் ,

யாழ்.பல்கலைக்கழகம்,

**2011.**

# அறிமுகம்

- உலகசுகாதாரநிறுவனத்தின் வரைவிலக்கணப்படி கட்டிளமைப் பருவம் என்பது 10-19 வயதிற்கு இடைப்பட்ட காலமாகும்.
- இது பிள்ளைப்பருவத்தில் இருந்து இளைஞர் யுவதிகளாக மாறுவதற்கு இடைப்பட்ட மிக முக்கியகாலமாகும்.
- இளமைப் பருவத்தில் நுழையும் போது உடலியல், உளவியல் மற்றும் சமூகவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன.
- இந்த பருவத்தில் ஏற்படும் சவால்களுக்கு சரியானமுறையில் முகம் கொடுக்காவிடில் அது பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

# கட்டிளமைப்பருவ கர்ப்பங்கள் தவிர்க்கப்படவேண்டியவை

❖ **கட்டிளமைப்பருவக்கர்ப்பம் என்றால் என்ன?**

20 வயதிற்கு குறைந்த பெண் ஒருவர் எதிர்பார்த்தோ அல்லது எதிர்பாராமலோ கர்ப்பம் தரித்தல்.

❖ **தவிர்க்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் என்ன?**

20 வயதுக்கு குறைந்த பெண் உடல், உள ரீதியில் தாயாவதற்கு முழுமையான விருத்தியை அடையாததால் கட்டிளமைக் கர்ப்பம் ஆபத்து நிறைந்ததாகும்.

## கட்டிளமைப் பருவக் கர்ப்பத்திற்கான காரணங்கள்

- இளவயதுத் திருமணங்கள்.
- கர்ப்பம் ஏற்படுவது தொடர்பான சரியான அறிவின்மை.
- கர்ப்பத்தடைமுறைகள் தொடர்பான அறிவின்மை.
- இளவயதுக் காதல்களும், முறைதவறிய உறவுகளும்.
- திருமணத்திற்கு முந்திய பாலியல் தொடர்புகள்.
- பாலியல் துஷ்பிரயோகங்கள்.
- நெருக்கமான வாழ்விடங்கள்(அகதி முகாம்கள்)/ சகவயதினரின் நெருக்கீடுகள்.



## தாயில் ஏற்படும் பாதிப்புக்கள்

### 1. மருத்துவ ரீதியிலான பாதிப்புக்கள்

- அதிகரித்த அளவில் கர்ப்பகாலகுருதிச்சோகை (Anaemia) கர்ப்பகால உயர்குருதியமுக்கம், கர்ப்பகால நீரிழிவுநோய் ஏற்படலாம்.
- கருப்பை கர்ப்பத்தைத் தாங்கும் வகையில் பூரண வளர்ச்சியடையாமையால் அதிகரித்த கர்ப்பகாலச் சிக்கல்கள்.
- தாய்மரணம் பிரசவத்தின் போது இரண்டு மடங்காக அதிகரிக்கலாம்.
- பாதுகாப்பற்ற கருச்சிதைவால் (இயற்கையான அல்லது தூண்டப்பட்ட) ஏற்படும் ஆபத்துகள்.
- குறைமாதப் பிரசவங்களும் அதன் விளைவுகளும்.
- இளம்தாயின் இடுப்பெலும்பு பூரண விருத்தியடையாததால் பிரசவ சிக்கல்கள் ஏற்படும்.

## 2.குழந்தைக்கு ஏற்படும் சமூகரீதியிலான பாதிப்புக்கள்

- குழந்தையும் இளம் வயதில் கர்ப்பம் தரிக்கும் ஆபத்து அதிகரித்தல்.
- சிறந்த வழிகாட்டலின்மை.

## பெண் திருமணமாகாதவராயின் ...



- சமூக அவமானத்திற்கு உள்ளாதல்.
- பெற்றோர், நண்பர்களால் ஒதுக்கப்படல்.
- எதிர்காலக் கனவுகள் சிதைக்கப்படல்.
- பாதுகாப்பற்றகருச்சிதைவுக்கு உட்படும் சந்தர்ப்பங்கள் அதிகரித்தல் - இதனால் மலட்டுத் தன்மை, இறப்பு, உளத்தாக்கம், சமூகஎதிர்விளைவுகள் ஏற்படலாம்.
- மனவடு, தற்கொலை.
- பிறக்கும் குழந்தையின் எதிர்காலம் பாதிக்கப்படுதல்.
    - குழந்தையின் பிறப்பை உரியமுறையில் பதிவு செய்யமுடியாமை.
    - குழந்தை சமுதாயத்தால் பழிக்கப்பட்டு ஒதுக்கப்படலாம்.
    - பிள்ளைக்கு அங்கீகாரமின்மை.
    - குரோதமனப்பான்மையுடைய வன்முறைப் போக்குள்ள குழந்தையாகமாறலாம்.

# பாதுகாப்பற்ற,சட்டவிரோதமான கருச்சிதைவும் அதன் பாதிப்புக்களும்

## பாதுகாப்பற்ற சட்டவிரோதமான கருச்சிதைவை தூண்டும் சந்தர்ப்பங்கள்.

- பாலியல் வல்லுறவு.
- திருமணத்திற்குமுன் கருத்தரித்தல்.
- தகாப்புணர்ச்சி, முறைகேடான பாலுறவு.
- திருமணமானவர்களில் திட்டமிடப்படாத கருத்தரிப்பு.
- கருத்தரித்தலின் பின் பட்டப்படிப்புகள், வெளிநாட்டு வாய்ப்புகள் கிட்டுதல்.

## சட்டவிரோதமாக தூண்டப்பட்ட கருச்சிதைவினால் ஏற்படும் பாதிப்புக்கள்

- அதிகளவு குருதி வெளியேறுவதால் தாய் மரணம் ஏற்படலாம்.
- பாவிக்கப்படும் தொற்றுநீக்காத உபகரணங்களால் கிருமித் தொற்று, tetanus என்பன ஏற்பட்டு மரணம் சம்பவிக்கலாம்.
- தொற்றுகளால் கருப்பை, பலோப்பியன் குழாய் பாதிக்கப்பட்டு பின்னா் கா்ப்பமடைய முடியாத நிலை ஏற்படலாம்.
- குருதியினுள் கிருமித் தொற்றுகை (Septicaemia) மூளைமென்சவ்வு அழற்சி (Meningitis), நுரையீரல் அழற்சி ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம்.

- ❖ மனநலப் பாதிப்புக்கள் ஏற்படலாம்.
- ❖ கருவானது தொடர்ந்துவளர்ந்து குறைபாடுடைய பிள்ளையை பிரசவிக்க வேண்டியநிலையை தோற்றுவிக்கலாம்.
- ❖ எதிர்காலத்தில் கருச்சிதைவுகள் ஏற்படலாம்.
- ❖ மனவேதனை, குற்றவுணர்வு என்பன ஏற்பட்டு நீண்டகால மன நோயாளியாகக் கூடமாறலாம்.

## கட்டிளமைப்பருவ கர்ப்பங்களைத் தவிர்க்கும் முறைகள்

- ➢ கல்வி, வேலைவாய்ப்புக்களில் கூடிய கவனம் செலுத்துதல்.
- ➢ தாய்மையடைதலையும் அதனால் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் தெளிவாக விளங்கிக்கொள்ளுதல்.
- ➢ இளமைப்பருவ உடல், உள மாற்றங்களை விளங்கிக் கொள்ளுதல்.
- ➢ பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்தல்.
- ➢ முறைதவறிய உறவுகளை தவிர்த்தல் அல்லது சந்தர்ப்பத்தை வழங்காமல் இருத்தல்.
- ➢ உரிய கருத்தடை மாத்திரைகளை பாவித்தல்.

  உ-ம் அவசரகால கருத்தடை மாத்திரைகள்
- ➢ பாதுகாப்பான உடலுறவு.

# அவசரகால கருத்தடை மாத்திரைகளை பாவிக்கும் முறை பற்றி அறியவேண்டுமாயின்...

உரியகாலத்தில் வைத்தியரை, உங்கள் பகுதி குடும்ப நல உத்தியோகத்தரை அல்லது பொதுசுகாதார பரிசோதகரை நாடுதல் வேண்டும்.




## குறிப்பு

இக்கருத்தடை மாத்திரைகள் உங்களை பாலியல் நோய்களிருந்து பாதுகாக்காது. அவ்வாறு பாலியல் நோய்களிலிருந்து பாதுகாப்பதாயின் ஆணுறை, பெண்ணுறை போன்றவற்றைப் பாவித்தல் ஓரளவு பாதுகாப்பானது.


தயாரிப்பு உதவி
ப.கோகிலன் (2008/FM/018),
4ம்வருட மருத்துவமாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

தயாரிப்பு ஆலோசனை
Dr.K.குருபரன்(MBBS, MD(O +G)),
மகப்பேற்று வைத்தியநிபுணர்,
மாவட்டபொது வைத்தியசாலை,
கிளிநொச்சி.

Dr.N.றாஜேஸ்கண்ணன்,
விரிவுரையாளர்,
சமுதாய மருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

திருமதி.ம.சிவராஜா,
சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
சமுதாய மருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



அனுசரணை
RDHS,
கிளிநொச்சி.